## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 94/2023

Date: 03.07.2025 PW. 1 ( ராமநாதன்)

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்திருக்கிறேன். நான் தற்போது வசிக்கும் அடுக்குமாடி கட்டிடத்தின் பெயர் என்ன என்றால் கோல்டன் லோட்டஸ் அப்பாட்மெண்ட்ஸ். மேற்படி அப்பாட்மெண்ட் மதுரை மூன்றுமாவடியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அப்பாட்மெண்டில் எந்த வருடத்திலிருந்து வசித்து வருகிறேன் என்றால் 2017லிருந்து வசித்து வருகிறேன். தற்போது எனது ஆதார் அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் மதுரை மூன்றுமாவடியில் உள்ள கோல்டன் லோட்டஸ் அப்பாட்மெண்ட் என்ற முகவரியில் உள்ளது. எனது நிரூபண வாக்குமூலத்திலோ, எனது பிராதிலோ தற்போதைய முகவரியை கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியான மஞ்சனக்காரதெரு என்பது யாருடைய முகவரி என்றால் எனது அப்பாவின் வீடாகும். பிரதிவாதியின் முகவரி மதுரை அனுப்பானடியை சேர்ந்தது என்றால் சரிதான். எனது வீடு 2கிமீ தொலைவில் தான் மாவட்ட நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாவட்ட நீதிமன்றத்திலிருந்து 7கிமீ தொலைவில் சென்றால் தாவா சொத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான். ஒவ்வொரு வாய்தாவிற்கும் மதுரையிலிருந்து தான்சிவகங்கை நீதிமன்றத்திற்கு வருகிறேன் என்றால் சரிதான். வாதியின் முகவரியும், பிரதிவாதியும் முகவரியும் மதுரையில் உள்ளதால் மதுரை நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்யாமல் அதிகார வரம்பை மீறி சிவகங்கை நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட விஜயகுமார், உதயகுமார் என்பவர்களை தெரியும் என்றால் சரிதான். உதயகுமார் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் மூலம் தொழில் செய்து வருகிறார். விஜயகுமார் எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தின் முன்னால் பங்குதாரர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விஜயகுமார் என்பவர் தான் 15.10.2015 தேதியிட்ட ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். என்னுடைய நிரூபண வாக்குமூலம் பாரா 3ல் நான்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.04 10:14:08 +0530

கடனுக்கு ஈடாக ஏதேனும் சொத்து அடமானம் வேண்டும் என்று கேட்டதன் பேரில் என்று கூறியுள்ள விவரத்தை வழக்கு பிராதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கடனுக்கு ஆதரவாக அடமானம் பத்திரம் வேண்டியிருந்தால் அது குறித்து பிராதில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனம் எங்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்திற்கு நான் ஒரு பங்குதாரர் என்றும் அதற்கு தேவையான மூலப்பொருட்களை உதயகுமார் என்பவரிடமிருந்து நான் வாங்குவேன் என்று சொன்னால் சரியல்ல. எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தில் நான் ஒரு பங்குதாரராக இருந்து, அதற்கு தேவையான மூலப்பொருட்களை உதயகுமார் என்பவரிடமிருந்து நான் வாங்கியதற்கான கணக்கு வழக்குகள் என்னிடமும் உதயகுமாரிடமும் உள்ளது என்றால் சரியல்ல. உதயகுமார் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் நான் எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர் என தெரியவரும் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலம் பாரா 3ல் பிரதிவாதிக்கு எந்த தேதியில் என்னால் கடன் கொடுக்கப்பட்டது என்று தேதி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தில் வரவு, செலவு தொடர்பான லாப, நஷ்ட கணக்குகளை நான் பிரதிவாதிக்கு ஒரு நோட்டில் எழுதிக்கொடுப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி பெயர் என்ன என்றால் அவர் பெயர் சாந்தி. மேற்படி பிரதிவாதியின் மனைவி சாந்தி என்பவர் தான் எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தின் Proparater என்றால் எனக்கு தெரியாது. எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தில் எனது நண்பர் விஜயகுமார் வெளியேறிய பின்பு நான் தொகை ரூ.5,00,000/- செலுத்தி அந்த நிறுவனத்தின் பங்கு தாரராக சேர்ந்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி யார் மூலம் எனக்கு அறிமுகம் என்றால் விஜயகுமார் மூலம் அறிமுகம். நான் பங்குதாரராக சேர்ந்ததால் அந்த தொகைக்கு ஆதரவாகத்தான் பிரதிவாதி அடமான பத்திரத்தையும், காசோலையையும் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 2019ம் வருடத்திலேயே எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்திலிருந்து வந்த லாபத்தையும், தொகை ரூ.5,00,000/- அசல் தொகையையும் பெற்றுக் கொண்டு அடமான ஆவணத்தை செல் வைக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. நான் எம்பிகே பாலிமர்ஸ் நிறுவனத்தின் பங்கு தாரர் என்றும் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கடனாக

கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதி கடன் பெற்றதற்காக அடமானப்பத்திரம் மற்றும் காசோலை எழுதிக்கொடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:** இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.04 10:14:14 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**